அவதிப்படும் நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12–4–1986 அன்று ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக பதினாறு குடிசைகளும், ஒரு சிறிய இயந்திரத் தொழிற்சாலையும் சேதமடைந்தன. 16 குடும்பங் களுக்கும் தலா ரூ. 300 வீதம் அரசு அளிக்கும் நிவாரணத் தொகை மொத்தம் ரூ. 4,800 வழங்கப்பட்டிருக்கிறது. அத் துடன் பாதிக்கப்பட்ட 16 குடும்பங்களுக்கும் முறைப்படி, விதி முறைப்படி ஒரு வேட்டி, ஒரு புடவை, 5 கிலோ அரிசி மற்றும் 1 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன. இத் தீ விபத்தில் உயிர்சேதம் ஏதும் ஏற்படவில்லை. மற்றவைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்த தீ விபத்திற்குக் காரணம் ஒரு தனியார் தொழிற்சாலை என்பதும் அந்தத் தனியார் தொழிற்சாலையை அங்கிருந்து எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன். இங்கே பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு தமி ழகத்தினுடைய முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 2 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிருந்து வந்த புகாரை ஒட்டி நான் முதலில் கூறியது படி நிலைமைகள் ஆராயப்பட்டு வருகின்றன. அதனை ஒட்டி என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று அங்கிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூல மாக வருகின்ற அறிக்கையை பார்த்துத்தான் மேற்கொண்டு நாம் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஆகவே, தீ விபத்து ஏற்படுமானால் குடிசைகளுக்கு 300 ரூபாய் அளவுக்கும் மற்றும் பல பொருட்களும் சலுகைகளாக தரலாம் என்று விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின் படி தான் ஏற்கெனவே தரப்பட்டு இருக்கின்றன.

(8) கொடைக்கானலில், தோட்டத் தொழிலாளர்கள் வேலை நீக்கம். செய்யப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் வேடச் சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மற்றும் கே. குப்புசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச் சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

மாண்புமிகு வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அண்ணா மாவட்டம், கொடைக்கானல் பகுதியில் ஏற்பட்டுள்ள சில சூழ்நிலை காரணமாக தோட்டங்களிலும் கூப்புகளிலும் வேலை செய்யும் சுமார் 5,000 தொழிலாளர்கள் வேலையின்றி இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கொடைக்கானலில் உள்ள தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படவில்லை. மாறாக கூப்பு ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் சிலர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இப்பிரச்சினை கொடைக்கானல் வருவாய்த் துறை மற்றும் வனத்துறையைச் சார்ந்ததாக இருப்பதால் அவர்கள் முன் நிலுவையில் உள்ளது. கூப்பு ஒப்பந்ததாரர்களிடம் பணியாற்றும் தொழிலாளர்கட்கு தொழிலாளர் நலச் சட்டங்களை அமுல்நடத்த வாய்ப்பு இல்லை.

(9) விவசாயத் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படியான வழக்குகளை விசாரிக்க, அண்ணா, மதுரை, திருச்சி மாவட்டங்களுக்கான ஒரே ரெவின்யூ கோர்ட் திருச்சியில் அமைந்துள்ளது,—

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்ட்'' சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க அண்ணா, மதுரை, திருச்சி, ஆகிய மாவட்டங்களுக்கான ஒரே ரெவின்யூ கோர்ட் திருச்சியில் அமைக்கப்பட்டுள்ளதால் அங்கு மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் தேங்கியுள்ளன. மேலும் அம்மாவட்டங்களிலுள்ள மக்கள் மேற்காணும் வழக்குகள் சம்பந்தமாக திருச்சிக்கு வர வேண்டிய கட்டாய சூழ்நிலையின் காரணமாக ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிரமங்களைப் போக்குவதற்காகத்தான் வருவாய் நீதி மன்றங்கள் அமைப்பதிலே